Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.712/2022

**Depositions of PW- 1**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.இசக்கிராஜ் | Occupation | தலைமை காவலர் |
| Father's name | பொன்னுக்காளை | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of June 2026.

09.06.2026

1, 2 எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது வன்னியம்பட்டி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.12.2016 அன்று காலை 06.15 மணிக்கு நான், சார்பு ஆய்வாளர், தகா.1156 மகேந்திரன் ஆகிய போலீஸ்பார்ட்டி சகிதம் எனக்கு ரகசிய தகவல் கிடைத்ததன் பேரில் மம்சாபுரம் கிராமம் வாழைக்குளம் கண்மாய் தென்கரையில் மணல் திருட்டு சம்மந்தமாக ரோந்து சுற்றி வரும்போது கரையிலிருந்து பின்னால் பெயர்விலாசம் கேட்டு தெரிந்த மம்சாபுரம் காளியம்மன் கோவில் வடக்குத்தெருவை சேர்ந்த அண்ணாத்துரை மகன் தங்கச்சாமி என்பவர் TN 67 AX 8978 மற்றும் TN 76 Z 7063 எண்ணுள்ள டிராக்டர் மற்றும் டிரைலருடன் வந்தார். மேற்படி டிரைலரில் பின்னால் உட்கார்ந்து வந்த மம்சாபுரம் இந்திரா நகர் கோவிந்தசாமி மகன் அய்யனார்சாமி என்பவர் போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் கீழே குதித்து தப்பி தலைமறைவாகிவிட்டார். பின்பு வாகனத்தை நிறுத்தி சோதனை செய்ய மணல் இருந்தது. தங்கச்சாமியை விசாரணை செய்ய தன்னுடைய சுயலாபத்திற்கு வாழைக்குளம் கண்மாயில் மணல் திருடிவந்ததாக சொன்னார். பின்பு பின்னால் அமர்ந்து வந்த தங்கச்சாமி என்பவர் மேற்படி டிராக்டரானது அய்யனார்சாமி என்பவரின்

டிராக்டர் என்று சொன்னார். அரசு அனுமதியின்றி மணல் திருடிவந்த குற்றத்திற்கு தங்கச்சாமியை கைது செய்து டிராக்டர் மணலுடன் கைப்பற்றியும் நிலையம் கொண்டு செல்வதற்காக தயாரிக்கலான அத்தாட்சியில் நான் கையெழுத்து செய்தேன். பின்னர் மேற்படி வழக்கு சொத்து மற்றும் எதிரி தங்கச்சாமியை நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **அத்தாட்சி அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள TN 67 AX 8978 என்ற பதிவெண் கொண்ட டிராக்டருடன் இணைந்த TN 76 Z 7063 என்ற பதிவெண் கொண்ட டிரைலர் தான் எங்களால் சம்பவத்தன்று கைப்பற்றப்பட்டதாகும். **மேற்படி டிராக்டருடன் இணைந்த டிரைலர் சாபொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்பு எதிரிகளை எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி வாழைக்குளம் கண்மாயானது 100 ஏக்கர் பரப்பளவு கொண்டது என்றால் சரியல்ல. சுமார் 50 ஏக்கருக்கும் மேல் இருக்கும். மேற்படி வாழைக்குளம் கண்மாயானது மம்சாபுரம் காவல்நிலையத்திலிருந்து 3 கிலோமீட்டர் தொலைவில் மேற்கு திசையில் அமைந்துள்ளது என்றால் சரிதான். வாழைக்குளம் கண்மாய்க்கு கிழக்கு பக்கம் கரை உள்ளது என்றாலும் மேற்கு பக்கம் கரை இல்லை என்றாலும் சரிதான். மேற்படி கிழக்கு பக்கமுள்ள கரை வழியாகத்தான் அதன் அருகிலுள்ள மற்ற காடுகளுக்கு செல்ல முடியும் என்றால் சரிதான். ஆனால் வேறு வழிகளும் உள்ளது. மம்சாபுரத்திலுள்ள விவசாயிகள் மேற்படி காடுகளுக்கு செல்ல வேண்டும் என்றால் மேற்படி கிழக்கு பக்கமுள்ள கரை வழியாகத்தான் செல்லவேண்டும் என்றால் அந்த வழியகாவும் செல்லலாம் வேறு வழிகளும் உள்ளது. மேற்படி வேறு பாதைகள் உள்ளதாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி வாழைக்குளம் கழிங்கிலிருந்து கிழக்கு பக்கமுள்ள கரையானது எத்தனை கிலோமீட்டர் இருக்கும் என்றால் சுமார் 3/4 கிலோமீட்டர் இருக்கும். மேற்படி கரையானது நேராக செல்லாது என்றாலும் வளைந்துதான் செல்லும் என்றாலும் சரிதான். மேற்படி கிழக்கு பக்கமுள்ள கரையை சுற்றி தனியாருக்கு பாத்தியப்பட்ட காடுகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கரையின் இருபுறங்களிலும்

பனைமரங்களும் வேறு மரங்களும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நான் கையெழுத்து செய்த அத்தாட்சியை நான் எழுதவில்லை என்றால் சரிதான் சார்பு ஆய்வாளர் எழுதினார். மேற்படி அத்தாட்சியில் பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட என்று குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் யாரிடம் கேட்டு தெரிந்துகொண்டோம் என்றால் 2ம் எதிரியான தங்கச்சாமியிடம் கேட்டு தெரிந்து கொண்டோம். அத்தாட்சியில் 2ம் எதிரியிடம் கேட்டு 1ம் எதிரிபற்றி தெரிந்துகொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் 2ம் எதிரியிடம் தான் கேட்டு தெரிந்துகொண்டேன். அத்தாட்சியில் மேற்படி நான் கூறியவாறு குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை என்றாலும் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவ சமயத்தில் எங்கள் காவல்நிலையத்தில் இசக்கிமுத்து என்பவரும் பணிபுரிந்தார் என்றால் இல்லை.

அத்தாட்சியில் யாருடைய காட்டின் அருகில் வைத்து எதிரியை பிடித்தோம் என்பது பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் முதலில் காவலர் இசக்கிமுத்து என்று எழுதிவிட்டு பின்பு தான் இசக்கிராஜ் என்று எழுதியுள்ளார்கள் என்றால் இசக்கிமுத்து என்று காவலர் யாருமில்லை. சம்பவ சமயத்தில் இசக்கி முத்து என்று ஒரு காவலர் எங்கள் காவல்நிலையத்தில் பணிபுரிந்துள்ளார் என்றாலும் அதனை நான் மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அத்தாட்சியில் இடைசொருகலாக எழுதப்பட்ட சொற்களை Whitener பயன்படுத்தி அழித்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி Whitener ஐ யார் பயன்படுத்தினார்கள் என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி அழிக்கப்பட்ட வாசகங்கள் என்ன என்பதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதனால் மேற்படி அத்தாட்சியானது எனது முன்பு எழுதப்பட்டதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. அத்தாட்சியை சார்பு ஆய்வாளர் எழுதியதாக கூறுப்படுவதும் பொய் என்றால் சரியல்ல.

அத்தாட்சியில் சார்பு ஆய்வாளர் கையெழுத்து செய்துள்ள இடத்தில் 22.12.2016 என்று எழுதப்பட்டு பின்னர் அதனை திருத்தி 20.12.2016 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வேண்டுமென்றே மேற்படி திருத்தங்களை எல்லாம் எனக்கு தெரியாது என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக லோடுமேன் இல்லாமல் மணல் அள்ள முடியாது என்றால் சரிதான். மேற்படி சம்பவத்தில் யார் லோடுமேன் என்பது பற்றி விசாரித்தோமா என்றால் அதுபற்றி விசாரித்தோம் ஆனால் எதிரி அதுபற்றி கூறவில்லை. மேற்படி சங்கதிகளை அத்தாட்சியில்

கூறியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் வாகனத்தை கைப்பற்றி எதிரியை விசாரிக்கவில்லை என்றாலும் அவ்வாறு விசாரித்திருந்தால் மேற்படி சங்கதிகள் பற்றி விசாரணையில் தெரியவந்திருக்கும் என்றாலும் பொதுவாக மணலை திருடுபவர்கள் உண்மையை கூறுவதில்லை. பொதுவாக நாங்கள் செய்யும் அன்றாட வேலைகளை எங்களது டைரி/பாஸ்புக்–ல் எழுத வேண்டும் என்றால் சரிதான். அதைபார்த்தால் சம்பவத்தன்று நாங்கள் ரோந்து பணிக்கு சென்றோமா என்று தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி டைரி/பாஸ்புக்கை சார்பு ஆய்வாளரிடம் ஒப்படைத்தோமா என்றால் இல்லை. மேற்படி டைரி/பாஸ்புக்கை பார்த்தால் நாங்கள் சம்பவயிடத்திற்கு செல்லாதது தெரியவரும் என்பதால் தான் அதனை சார்பு ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

மேற்படி சம்பவத்தன்று நாங்கள் சென்றபோது வாழைக்குளம் கண்மாயில் எவ்வளவு தண்ணீர் இருந்தது என்றால் தண்ணீர் மிகவும் குறைவாகத்தான் இருந்தது. வாழைக்குளம் கண்மாய் கிழக்குபக்க கரையின் முடிவில் பனையேறும் தொழிலாளிகளின் 50 க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அவர்கள் கண்மாயில் தண்ணீர் இருந்தால் கரைவழியாகவும் தண்ணீர் இல்லை என்றால் கண்மாய் வழியாகவும் செல்வார்கள் என்றால் சரிதான். பனையேறும் தொழிலாளர்கள் பொதுவாக காலை 06.00 முதல் 07.00 மணிக்குள் பனையேறுவதற்காக வந்துவிடுவார்கள் என்றால் மேற்படி நேரத்தை குறிப்பிட்டு கூற இயலாது. எங்களை பார்த்ததும் 1ம் எதிரி ஓடிவிட்டார் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. மேற்படி கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் மணலானது எங்கிருந்து அள்ளப்பட்டது என்பது பற்றி நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி சம்பவம் நடந்ததாக கூறப்படும் அன்று மணலோ வண்டியோ கைப்பற்றப்படவில்லை என்றாலும் இவ்வழக்கானது எங்களுக்கு தெரியந்த காரணங்களுக்காக எதிரிகள் மீது பொய்யாக போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.